# 2.7 திட்ட நாள்களுக்கான மூன்று ஆலோசனைகள்

**தொடக்க நிலைக் குறிப்புகள:**


பின்வரும் பரிந்துரைகள் மிகுதியான நேரத்தை எடுப்பனவாகவும் முதன்மையான கருத்திட்ட நாள்களுக்கு மிகவும் பொருத்தமானதாகவும் உள்ளன. பா.மொ.க ஒவ்வொரு கிழமையும் 2 – 3 மணித்தியாலங்களே கற்பிப்பதனால் திட்ட நாள்கள் அல்லது ஒவ்வொரு நாள் திட்டங்கள் மிக அரிதாகவே நடக்கும். பரிந்துரைக்கப்பட்ட கருத்துக்கள் பா.மொ.க வுக்கும் பாரம்பரிய பெருங் கல்விக்கும் இடையே அல்லது வெவ்வேறு பா.மொ.க குழுக்களுக்குமிடையில் பல கூட்டுறவான முயற்சிகளுக்கு குறிப்பிட்ட பாடசாலையின் திட்டநாள் வாரத்தில் ஒருநாள் அல்லது தனியான திட்ட நாள்களின் கட்டுமானத்துள் நடத்தப்படுவதற்கு பொருத்தமானவை. பின்வரும் பரிந்துரைகளுக்கு இன்னொரு சூழல் பா.மொ.க நிதி வழங்குபவர்களால் வழங்கப்படும் விடுமுறை அல்லது கோடைக்கால பயிற்சி நெறிகளாகும்.

**இலக்கு**

*பிறந்த நாட்டிலும் புகுந்த நாடுகளிலும் குடிபெயர்வு, பண்பாடு மற்றும் மொழியியல் பல்வகைத்தன்மை (அலகு 3 ஐப் பார்க்கவும்) போன்ற கருப்பொருள்கள் மிகவும் உயரிடத்தைப் பெற்றுள்ளன. விழிப்புணர்வு, உணர்திறன், இத் தலைப்புகள் தொடர்பான திறன்களைக் கையகப்படுத்துவது என்பது கேள்விக்கு இடமில்லாதவாறு மிக உயர்ந்த தொடர்புடைய உணர்வாற்றல் சார்ந்த நோக்காகும்.*

## 2.7அ
## என் குடும்பத்தின் குடிபெயர்வுக்கதை

வகுப்பு 4 - 9 | கருத்திட்ட நாள்



**நடைமுறை:**

- இத்திட்டம் ஆகக் குறைந்தது இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது. (எ.கா. ஒரு கருத்திட்ட கிழமையின் இரண்டு அரை நாள்கள்). முதற் கிழமையில், குடும்பத்தின் புலம்பெயர்வு கதைக்கான கேள்விகளைத் திரட்டி ஒரு கேள்விக்கொத்தாகத் தொகுக்கப்படும். (மாதிரி வினாக்களுக்கு கீழே பார்க்க). இவ்வினாக்களுக்கு முதலில் தனித்தனியாக மாணவர்களால் விடையளிக்கப்படும். பின்னர் அவை சிறு குழுக்களுக்கிடையில் பரிமாறப்படும்.
- வீட்டு வேலை ஒப்படையாக, மாணவர் தமது பெற்றோரை அல்லது பேரர் மற்றும் உறவினரை நேர்காணல் செய்வர். விடைகளை எழுத்தில் பதிவு செய்து வகுப்பறைக்கு எடுத்து வருவர்.
- இரண்டாம் கட்டத்தில் முடிவுகள் ஆவணப்படுத்தப்பட்டு ஆராயப்படும். சிறு சுவரொட்டிகள் இந்நோக்கத்திற்காக உருவாக்கப்படும். பின்னர் அவை அளிக்கை செய்யப்பட்டு கலந்துரையாடப்பட்டு ஒப்பிடப்படும். இன்றியமையாத பண்புகள்: குடிபெயர்வுக்கான காரணங்கள், ஐரோப்பா அல்லது உலகப்படத்தின் மேல் காட்சிகள், குடும்பத்தின் மீதான குடிபெயர்வின் தாக்கம் (எ.கா. பொருளாதார, பண்பாட்டு, மொழி அடிப்படையில்) சுவரொட்டிகளைப் படங்களாலும், பொருள்களாலும், மாதிரி நேர்காணல் கேள்விகள் வரைபடங்களாலும் நிறைவுபடுத்தப்பட முடியும்.

---

- இரண்டாம் கட்டத்தில் முடிவுகள்
  - குடிபெயர்வுப் பின்னணி பற்றிய கேள்விகள் (எங்கே பிறந்தீர்கள்? இங்கு எப்போது வந்தீர்கள்? அப்போது என்ன வயது? உறவினர்களுடன் எத்தகைய தொடர்புகளைக் கொண்டிருந்தீர்கள்? எப்படி இத்தொடர்புகளைப் பேணுகிறீர்கள்? எப்படிப் பெற்றோருடனும், சகோதரர்களுடனும் பேசுகிறீர்கள்? முதலியவை.)
  - பெற்றோர், பேரர்கள் மற்றும் உறவினர்களின் குடிபெயர்வு பற்றிய கேள்விகள் (எங்கே பிறந்தார்கள். இப்போது எங்கே வாழ்கின்றார்கள்? ஏன் இங்கே வந்தார்கள்? உங்கள் குடும்ப உறுப்பினர்கள் உங்கள் பெற்றோர், பூட்டன், பூட்டிமாரின் தாய்நாடு பற்றி எப்படிப் பேசுகிறார்கள்? என்ன சிறப்புக் கொண்டாட்டங்களை உங்கள் குடும்பத்தில் கொண்டாடுகிறீர்கள்? யார் யார் பங்குபற்றுவர்? என்ன சாப்பிடுவார்கள்? எந்தக் குழுக்களுடன், கூட்டுக்களுடன், நிறுவனங்களுடன் அவர்கள் இணைந்திருக்க விரும்புவர்? பிறந்த நாட்டுடனும், குடிபுகுந்த நாட்டுடனும் எவ்வகையான தொடர்புகளைப் பேணுவர்? பின்னோக்கிப் பார்க்கையில் குடிபெயர எடுத்த முடிவை எப்படி மதிப்பிடுவர்? எக்கனவுகள், ஆசைகள் நிறைவெய்தின? எவை நிறைவேறவில்லை?

2

## 2.7ஆ
## எங்கள் குடியிருப்புப் பகுதியில் பண்பாட்டுப் பல்வகைத் தன்மை

வகுப்பு 4 - 9 கருத்திட்ட நாள்

**நடைமுறை:**

- ஆசிரியர் வகுப்பறைக்கு அறிவிப்பார்: நேர்காணல் அல்லது அறிக்கை சார்ந்து பின்வரும் விடயங்கள் அமையவேண்டும் (இச்செயற்பாடு பின்வருமாறு அமையும் என்பதை). புலப்பெயர்வுக்கான அடிப்படைக் காரணம் விளக்கமாக, குடியிருப்பு பகுதியிலுள்ள கலாச்சார வேறுபாடுகள், தமது குடும்பம் மற்றும் இனக்குழுவினரை வெளிக்காட்டுவதாகவும், பிரதிபலிப்பதாகவும் இருக்கவேண்டும். இக்கருத்திட்டம் 2.7 இல் உள்ள பரிந்துரையை கூடியளவு தொடர்ந்து கடைப்பிடிக்கும்.
- வகுப்பு முழுமையாக அல்லது குழுக்களில் மாணவர் நேர்காணல் கேள்விகளை அயலவர் மற்றும் மற்றைய அயல் மக்களிடமிருந்து திரட்டுவர். திட்டம் 2.7அ வில் உள்ள கேள்விகள் ஒரு அடிப்படையாக அமையும். அது பிறந்த நாடு, மொழி, குடிபெயர்ந்த காலங்கள் பற்றிய தகவலுடன் விரிவாக்கப்படும்.
- இப் பகுப்பாய்வு 2.7அ கருத்திட்டத்துக்கு உரிய ஒரு மாதிரியைப் பின்பற்றும்.

---

## 2.7இ
## குடிபெயர்வு எங்கள் எல்லோரையும் ஆவலுடையோராக ஆக்குகின்றது!

வகுப்பு 4 - 9 கருத்திட்ட நாள்

**நடைமுறை:**

- கருத்திட்டம் 2.7ஆ விலிருந்து எடுக்கப்பட்ட நேர்காணல்களின் உண்மையான தொடர்ச்சியாக, வெவ்வேறு பண்பாட்டுடைய குடிபெயர்ந்தோர் (எடுத்துக்காட்டு மாணவர் அல்லது ஆசிரியருடன் தொடர்புபட்டவரும், அயலவர்களும்) தமது குடிபெயர்வு வரலாற்றை வகுப்பு மாணவர்களுக்கு கூறும்படி அழைக்கப்படுவர். முன்னேற்பாடாக ஆசிரியர், மாணவர்களுடன் இன்றியமையாத இடங்கள், குடிபெயர்ந்த தன்வரலாற்றுப் பண்புகள் பற்றிக் கலந்துரையாடலாம், அதனுடன் ஒரு சட்டகத்தினை உருவாக்கி அதில், எடுத்துக்காட்டாக, பிறந்த இடம், புலப்பெயர்வு காரணம், பயணம், வருகை, இன்றையநிலை, விருப்புகள் முதலியவற்றை உள்ளடக்கலாம்.
- கதைகூறும் வேளையில் மாணவர்கள் சட்டகத்தில் குறிப்புக்கள் எழுதலாம் பின்னர் வீட்டுவேலையாக குடிபெயர்ந்த வேளையில் நாட்டின் சூழல் குறித்தும், அந்நாட்டைப்பற்றியும் ஒரு ஆய்வுத்திட்டத்தை உருவாக்கி வழங்கலாம் அல்லது அதன் நிலைப்பாடு பற்றிய ஒரு அடிப்படை எழுத்துருவை வாசிக்கலாம்.
- முடிவில் மேற்கொள்ளப்பட்ட விடயங்களையும் தமது புலப்பெயர்வுக்கான சூழ்நிலை நோக்கத்தையும் ஒப்பிட்டு ஒரு கலந்துரையாடல் நிகழ்த்தலாம்.